## கரூர் மாவட்டத்தில் 5 ஆண்டு கால ஆட்சியில்

# ரூ.5100 கோடியிலான வளர்ச்சித் திட்டத்தை தந்துள்ளார் முதல்வர்!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேட்டி!



**கரூர், மார்ச் 19 -**

**கரூர் மாவட்டத்தில் 5 ஆண்டு ஆட்சியில் ரூ.5100 கோடி வளர்ச் சித் திட்டங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், வர லாற்றில் இல்லாத அளவிற்கு நிறைவேற்றி உள்ளார்கள் என கரூரில் செய்தியாளர்களிடம் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி பட்டிய லிட்டார்.**

கரூர் கலைஞர் அறிவாலயம் தள பதி அரங்கில் மாவட்டக் கழகச் செய லாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஐந்து ஆண்டுகளில் கரூர் மாவட்டம் வரலாறு காணாத வளர்ச் சியை அடையும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி இருக்கி றார்கள். குறிப்பாக நீண்ட கால கோரிக்கையான புதிய பேருந்து நிலையம் 40 கோடி ரூபாய் மதிப்பீட் டில் அடிக்கல் நாட்டப்பட்டு பிறகு நீதி மன்றம் வரை சென்று ஆணையைப் பெற்று முழுவதுமாக நிறைவு செய்து துணை முதல்வர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள். அடுத்து கரூருக்கு வருமா வராதா என்ற நிலையில் இருந்த தொழில் முனைவோர்களது ஏக்கத்தை நிறைவேற்றும் வகையில் 38.50 கோடி ரூபாய் அளவில் மினி ஐ.டி. பார்க் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி இருக்கிறோம். ரூ.134 கோடி மதிப்பீட்டில் கரூர் கோவை நான்கு வழி சாலை விரிவாக்க திட்டம் செயல்படுத்தப்பட்டு இருக்கிறது. ஏதோ பத்து வருடத்திற்கு முன்பு எம்.பி தேர் தலில் ஒருவர் பூதக்கண்ணாடி வைத்து பணிகள் தொடங்கியது என்று கூறிய தைப் போல் அல்லாமல் பணிகள் முடிக்கப்பட்டு, இப்போது எளிதில் கோவை சென்று வருகின்றனர்.

101 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நெரூர் உண்ணியூர் காவிரி ஆற்றில் உயர்மட்ட பாலம் திறக்கப்பட்டுள்ளது. ஈரோடு சாலை விரிவாக்கம் என்பது நீண்ட கால கோரிக்கையாகும். 62.05 கோடி ரூபாய் நிதியை வழங்கி பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. கரூர் காமராஜ் மார்க்கெட்டில் வணிக வளா கம், ரூ.6.90 கோடி செலவில் பயன் பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மாவட்ட மைய நூலகம் ரூ.6. 90 கோடி செலவில் மாணவர்கள் பயன்படுத்தக் கூடிய அளவில் கொண்டுவரப்பட்டுள் ளது. கலெக்டர் அலுவலகம் அருகில் ரூ.5 கோடி 97 லட்சம் மதிப்பில் அறி வியல் பூங்கா. 5 கோடி மதிப்பீட்டில் தோழி தங்கும் விடுதி, அரசு கலைக் கல்லூரி அருகில் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

வெங்கமேட்டில் மீன் மார்க்கெட், அரசு இசைக் கல்லூரிக்கு சொந்த கட் டிடம் வசதி, பசுபதீஸ்வரர் பள்ளியில் அறிவுசார் மையம். நகராட்சி ஆண் கள் மேல்நிலைப் பள்ளியில் நீச்சல் குளம். அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 20 கோடி செல வில் கூடுதல் கட்டடம்.15 கோடியே 75 லட்சம் செலவில் அரசு கலைக்கல்லூ ரிக்கு கூடுதல் வகுப்பறைகள், சிறப்பு நிதிகளாக கரூர் மாநகராட்சிக்கு 245 கோடி ரூபாய் செலவில் புதிய குடிநீர் திட்டம், ரூ. 485 கோடி ரூபாய் மதிப் பில் பாதாள சாக்கடை திட்டம். சுங்க கேட் முதல் வெங்கக்கல்பட்டி வரை சாலை விரிவாக்கம். திருமாநிலையூர் முதல் சுக்காலியூர் வரை சாலை விரி வாக்கம். சுற்று வட்டச் சாலையை பொருத்த அளவில் ரூ. 72 கோடி மதிப்பீட்டில் கரூர் ஈரோடு சாலை குட்டை கடை தொடங்கி மண்மங்கலம் வரை நிலம் எடுப்பு பணிகள் நடை பெற்று வருகிறது. 2ம்கட்டமாக 16 கால் மண்டபம் தொடங்கி சோமூர், திரு முக்கூடலூர் சாலை வரை பணிக ளுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

புதிய வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மண்மங்கலம் புதிய பத் திரபதிவு அலுவலகம், அரவக்குறிச்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூ ரியை தந்ததோடு மட்டுமல்ல புதிய கட்டிடம் கட்டுவதற்கும் நிதிகளை முத லமைச்சர் அவர்கள் வழங்கி உள்ளார் கள். ரூ.16 கோடி ரூபாய் செலவில் முருங்கை உற்பத்தி பூங்கா பணிகள், தரகம்பட்டியில் உள்ள அரசு கலை மற் றும் அறிவியல் கல்லூரிக்கு நிரந்தர கட்டிடம் திறந்து மாணவ செல்வங்கள் பயன்படுத்தி வருகிறார்கள். புலியூரில் வணிகவரி அலுவலகம் கட்டப்பட் டுள்ளது.

200 ஏக்கர் பரப்பளவில் புதிய சிப்காட் அமைக்க அறிவிப்பு வெளி யிட்டு கூடுதலான இடங்களை கைய கப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு 390 ஏக்கர் பரப்பளவில் புதிய சிப்காட் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் தொடங்கி இருக்கிறோம். 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மாவட்ட அரசு தலைமை மருத்துவ மனை குளித்தலையில் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைத்து பயன் பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

குளித்தலை தொகுதியில் மினி விளையாட்டு அரங்கம், இப்படி ஒட்டு மொத்தமாக பல்வேறு பணிகள் துறை கள் வாரியாக எடுத்துச் செய்யப்பட்ட பணிகள் கரூர் மாநகராட்சியில் மட்டும் 110 கோடி ரூபாய், 12 ஊராட்சிகளில் 200 கோடி ரூபாய் மதிப்பில் பணிகள், பள்ளப்பட்டி நகராட்சியில் 37 கோடி, புகளூர் நகராட்சியில் 40 கோடி, புஞ்சை தொட்டக்குறிச்சி பேரூராட்சி யில் 30 கோடி, அரவக்குறிச்சி பேரூ ராட்சியில் 36 கோடி, 54 ஊராட்சி களில் ரூ. 384 கோடி அளவுக்கு அரவக்குறிச்சி தொகுதியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புலியூர் உப்பிடமங்கலம் பேரூராட் சியில் தலா 31 கோடி, கிருஷ்ணராய புரம் 30 கோடி, பழைய ஜெயங் கொண்டம் பேரூராட்சியில் 32 கோடி, மேங கிருஷ்ணராயபுரம் தொகுதி 45 ஊராட்சிகளில் 336 கோடி ரூபாய் அளவிற்கான வளர்ச்சிப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு இருக்கிறது. குளித்தலை நகராட்சிக்கு ரூ.53 கோடி மதிப்பில் பணிகள் நிறைவு செய்து மக்களுடைய பயன்பாட்டிற்கு கொண்டு வந்திருக்கிறோம். நங்கவ ரம் பேரூராட்சியில் 29 கோடி, மருதூர் 19 கோடி ரூபாய், மேலும் 41 ஊராட் சிகள் உள்ளடக்கிய குளித்தலை சட்ட மன்ற தொகுதியில் 370 கோடி ரூபாய் மதிப்பிலான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டிருக்கிறது.

**முழுக்க வளர்ச்சி திட்டங்கள்!**

இப்படி தொடர்ச்சியாக ஒவ்வொரு துறை வாரியாக மாநகராட்சி, நக ராட்சி, பேரூராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் துறைகள் சார்ந்த பணிகள் அனைத்து துறைகளையும் ஒன்றி ணைத்து இந்த ஐந்து ஆண்டுகளில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் 5,100 கோடி ரூபாய் அளவிற் கான வளர்ச்சி திட்ட பணிகளை வழங்கி இருக்கிறார்கள். நலத்திட்டங் களின் உதவித்தொகைகள் வழங்கப் படுவதை நாங்கள் இதில் சேர்க்க வில்லை.

இன்னும் பல திட்டங்களை தருவ தற்கு முதலமைச்சர் அவர்கள் தயாரா கிறார்கள். குறிப்பாக கரூருக்கு விமான நிலையம் வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று ஒன்றிய அர சுக்கு வலியுறுத்தி இருக்கிறார்கள். போதிய இடம் இல்லாததால் தள்ளிப் போயிருக்கிறது. அடுத்த திராவிட மாடல் ஆட்சியின் 2.0 வில் கொண்டு வரப்படும்.

ஜவுளித்துறைக்கான பரிசோதனைக் கூடம் அமைக்க பணிகளை முன்னெ டுத்துக் கொண்டிருக்கிறோம். கோவை யில் உள்ள கொடிசியா போல கன்வர் சன் ஹால் அந்த ஒரு திட்டம் மட்டும் நிலுவையில் உள்ளது. இடம் தேர்வா னதும் முழுமையாக அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களையும் நிறை வேற்றினோம் என்ற நிலை ஏற்படும். வரலாற்று சிறப்புமிக்க ஒரு ஆட்சியாக திரும்பி பார்த்தால் ஒரு மலையை பார்ப்பது போல வளர்ச்சி திட்டங்களை வழங்கிய தமிழக முதல்வர் அவர்க ளுக்கு அனைத்து உள்ளாட்சி பிரதிநி திகள், மாவட்ட மக்களின் சார்பாக கோடான கோடி நன்றியை தெரிவித் துக் கொள்கிறோம்.

**கரூர் மாவட்டத்தில் 4 க்கு 4 வெற்றி பெறுவோம்!**

கரூர் மாவட்டத்தைப் பொறுத்தவ ரையில் நான்கு தொகுதிகளிலும் மகத் தான வெற்றியை மக்கள் தருவார்கள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தமிழ்நாட்டில் மகத்தான வெற்றியை பெறும். தேர்தல் பணிகளை தொடங்கி விட்டோம் வேட்பாளர்கள் அறிவிக்கப் பட்டதும் நேரடியாக மக்களை சென்று சந்தித்து பணிகளை தொடங்குவோம். சுற்றுப் பயணத்திற்கான அட்டவணை எல்லாம் தயார் செய்து வைத்துள் ளோம் வேட்பாளர் பெயர் மட்டும்தான் பாக்கி. நூறு வாக்குறுதிகளில் குறிப் பிட்ட சிலவற்றைத் தவிர மற்றவற்றை நிறைவேற்றி இருக்கிறோம். 70க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை முழுமை யாக நிறைவேற்றி இருக்கிறோம். ஒன்றிய அரசு சார்ந்து, அரசு சார்ந்து எடுக்க வேண்டிய பணிகள் அவை.

மாவட்டத்தில் 55,000 பேருக்கு வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட் டுள்ளன. இது வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வு ரேஷன் கடைகளுக்கு 2 கிலோ மீட்டர், 4கிலோமீட்டர் என நடந்து சென்ற நிலையை மாற்றி 156 புதிய கடைகள் திறக்கப்பட்டு இருக் கின்றன. இதுவரை கரூர் மாவட்டத் தில் இப்படி திறக்கப்பட்டது கிடை யாது.

**கொரோனா காலத்தில் ஓடியவர்கள்!**

ஒரு விஷயத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன் அர சியல்வாதிகள் வன்மத்தோடு தரமில் லாத மட்ட ரகமான ஒரு அரசியலை முன்னெடுக்கிறார்கள். நான் இது வரை எம்எல்ஏவாக 20 ஆண்டுகள் இருந்து இருக்கிறேன். யாரையும் தனிப்பட்ட முறையில் சொன்ன தில்லை எதிர் வேட்பாளர் பெயரை கூட நான் சொல்வதில்லை. எங்க ளுக்கு வாக்களியுங்கள் எங்கள் தலை வருடைய திட்டங்களை கொண்டு வந்து சேர்ப்போம் கோரிக்கைகளை நிறைவேற்றுவோம் என்று தான் கூறு வேனே தவிர செய்த சாதனைகளை கூறி தான் ஓட்டு கேட்போம். இப்படி சொல்வது தான் அரசியல் களத்தில் எதார்த்தமானது. ஆனால் மற்றவர் கள் சொல்வதற்கு சாதனைகள் எது வும் இல்லை அதனால் ஒருமையில் பேசுவது மட்ட ரகமான அரசியலை செய்வது என செயல்படுவதை நீங்கள் பார்க்கிறீர்கள். சாதனையை சொல்வ தற்கு தகுதி இல்லாதவர்கள் சாத னையே செய்யாதவர்கள் இப்படி பேசுகிறார்கள்.

கொரோனா காலத்தில் எம்.எல்.ஏ. அலுவலகத்தை பூட்டி விட்டு போய் விட்டார்கள். ஆனால் எங்கள் மாவட்ட கட்சி அலுவலகத்தில் 24 மணி நேர மும், ஒரு குடும்பம் கூட விடுபடாமல் லோடு லோடாக ஏற்றிச் சென்று நிவா ரண பொருட்களை வழங்கினோம். ஆட்சி என்பதை தாண்டி மக்களோடு கலந்து அவர்கள் தேவைகளை நிறை வேற்ற வேண்டும் என்பதுதான் எங் கள் தலைவர் அவர்கள் இட்ட கட்டளை.

கடந்த ஆட்சியில் ஏதாவது ஒரு சிறப்பு திட்டம் நிறைவேற்றியதாக சொல்ல முடியவில்லை. மருத்துவக் கல்லூரி நான் கேட்டு வாங்கியது. நான் சொன்ன இடத்தில் கட்டாமல் கோர்ட்டு வரை சென்று வேறு இடத் தில் கட்டினார்கள். ஐந்து ரோடு அமரா வதி பாலம், 2 குகை வழி பாதை, அரசாணை வாங்கியது நான். ரயில்வே சாலை நான் இருக்கும் போதே கொண்டுவரப்பட்டது. ஆனால் ஐந்து வருடம் கிடப்பில் போட்டார்கள். இப்போது முழுமையாக நிதியை பெற்று கலைஞர் சாலை அமைத்தி ருக்கிறோம்.

**திட்டத்தை கொண்டு வர தகுதியும் இல்லை! திறமையும் இல்லை!**

எந்த ஒரு திட்டமாவது இதை நாங் கள் செய்தோம் என்று சொல்வதற்கு அவர்களுக்கு தகுதியும் இல்லை. திற மையும் இல்லை. சிறப்பு திட்டங்களை பற்றி பேசாமல் தெருவிளக்கு போட் டேன், சாக்கடை கட்டினேன், சாலை அமைத்தேன் என்பது அதிகாரத்தில் இருப்பவர்கள் செய்வதல்ல. உள் ளாட்சி நிர்வாகிகள் அதை செய்து விடுவார்கள். இரண்டு ஆட்சியையும் ஒப்பிட்டு பாருங்கள். என்னிடம் எவ்வ ளவு கேள்விகள் வேண்டுமானாலும் கேட்கிறீர்கள். நான் பதில் சொல்கி றேன். அதைப் போல நீங்கள் நீங்கள் அதிகாரத்தில் இருக்கும்போது செய் ததை சொல்லுங்கள் என அவர்களிட மும் கேள்வி கேட்டால் உங்களுக்கு தெரியும்.


தவணை முறையில் வாக்குறு தியை கொடுக்கிறது அ.தி.மு.க. அதை வைத்துக்கொண்டு ஓட்டு கேட்கும் நிலைக்கு அலைந்து கொண்டு இருக் கிறார்கள். இதுதான் கரூர் மாவட்டத் தின் எதார்த்த நிலை. என்னை அன் பாக பாசமாக நேசிக்கும் கரூர் மக்களுடன் தான் இருப்பேன். எனது கனவு மாவட்டம் இன்னும் வளர்ச்சி பெற, நிறைய திட்டங்களை கொண்டு வர வேண்டும். மற்ற மாவட்டங்களை விட கரூர் மாவட்டம் இன்னும் சிறப் பான வளர்ச்சி பெற வேண்டும். அதில் நமது பங்களிப்பு இருக்க வேண்டும். நீரேற்று பாசன திட்டங்கள் 20 ஆண் டுகாலம் 25 காலமாக கோரிக்கை வைத்து வந்தார்கள். பலமுறை முயற்சி எடுத்து நடக்கவில்லை. நம்மு டைய முதலமைச்சர் அவர்கள் உத்த ரவு போட்டு 1641 ஏக்கர் பாசனத்திற்கு நீர் கொண்டுவரும் பணியை தொடங்கி உள்ளோம். நமது மாவட் டமா? இன்று வியந்து பார்க்கக்கூடிய அளவிற்கு வளர்ச்சியை நாம் பெற வேண்டும் இன்னும் பயணிக்க கூடிய தூரம் நிறைய உள்ளது. 2030 க்குள் 50 ஆயிரம் கோடி உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதை நிச்ச யமாக நிறைவேற்ற அரசு துணை நிற்கும். அடுத்து ஆட்சிக்கு வந்து முழு மையாக நிறைவேற்றுவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ.வி.தட்சிணாமூர்த்தி

**மார்ச் 19 (2012)**



நான்கு முறை ஆர்.கே.நகர் தொகுதிக்குட்பட்ட 7வது வார்டு கிளைக் கழகச் செயலாளராகவும், இரண்டுமுறை வடசென்னை மாவட்டக் கழக பொருளாளராகவும், அதன்பின் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சியின் தண்டையார்பேட்டை மண்டலக் குழு தலைவராக பணியாற்றி அப்பகுதி மக்களின் அன்பைப் பெற்றவர்.

சென்னை குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண சென்னை மாவட்டக் கழகம் நடத்திய சாலை மறியலில் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டவர்.

கழகம் அறிவித்த இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்பு தரக்கோரி நடத்திய அறப்போராட்டம், இந்தித் திணிப்பை எதிர்த்து கழகம் நடத்திய அறப்போராட்டம் ஆகியவற்றில் கலந்துகொண்டு சிறை தண்டனை பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ஈரான் போரும், பிரதமர் நரேந்திரரின் தடுமாற்றமும்!

தற்போது ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் தொடுத்த போரினால் உலகப் பொருளாதாரத்தில் தொடர் சரிவுகள் ஏற்பட்டு வருகின்றன. எப்போது போர் முடியும்? அமைதி திரும்பும் என்று கவலையோடு இந்தியாவில் மக்கள் உள்ளனர்.

இப்போரினால்; இந்தியாவில் பெட்ரோலியப் பொருட்கள் பற்றாக்குறையும், எரிவாயு உருளைகள் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளன. அமெரிக்க அதிபர் டிரம்ப் ஏற்கனவே இந்திய அரசிற்குப் பல கட்டளைகளை இட்டு வருகிறார்.

இரஷ்யாவிலிருந்து பெட்ரோலியப் பொருட்களை வாங்காதே என்றார். இந்தியாவும் வாங்குவதைக் குறைத்தது. இப்போர் முடிவுறாத சூழலில் வேண்டு மென்றால் இரஷ்யாவிடமிருந்து ஒரு மாதத்திற்கு மட்டும் கச்சா எண்ணெயை வாங்கிக் கொள்ளுங்கள் என்று ஆணையிடுகிறார். டிரம்ப்பின் கட்டளையை இந்தியா ஏற்றதனால் இனிமேல் குறைந்த விலையில் கச்சா எண்ணெயை இந்தியாவிற்கு இரஷ்யா அளிக்காது என்றும் சந்தை விலையில்தான் இந்தியா வாங்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

இந்தியப் பொருளாதாரம் ஏற்கனவே சரிந்து வருகிறது. ஏற்றத்தாழ்வுகள், வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது. எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போன்று பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வு இந்தியாவின் அனைத்து உற்பத்தித் துறைகளையும் தாக்கி வருகிறது. மூலதனச் சந்தையான பங்குச்சந்தையில் ஏற்கனவே ரூபாய் பத்து இலட்சம் கோடி அளவிற்கு முதலீட்டாளர்களுக்குக் கடந்த 15 நாட்களில் இழப்பைத் தந்துள்ளது. இதைப் பற்றி எல்லாம் பிரதமர் நரேந்திரர் கவலை கொள்ளாமல் தேர்தல் பரப்புரையில் எதிர்க்கட்சிகள் மீது பல பொய் குண்டுகளை வீசி வருகிறார்.

நோபல் பரிசுப் பெற்ற அமெரிக்கப் பொருளாதார அறிஞர் ஜோசப் ஸ்டிக்லிஷ், ஆய்வாளர் லிண்டா ஜே.பிலிம்சு ஆகியோர் இணைந்து 2003இல் அமெரிக்கா ஈராக் மீது நடத்திய போரின் ஓராண்டுச் செலவைக் கணக்கிட்டு The Three Trillion Dollars War என்ற நூலை எழுதினர். அன்றைய இந்திய ரூபாய் மதிப்பில் அமெரிக்கா ஒரே ஆண்டில் 150 இலட்சம் கோடியை இப்போருக்காகச் செலவிட்டது. அந்நூலில், “அமெரிக்காவின் உயர் அதிகார நிலையில் இருப்பவர்கள் அளித்த தவறான தகவல்களின் அடிப்படையில் இந்தப் போர் தொடுக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பாதுகாப்பு அவையின் ஒப்புதலைப் பெறாமல், பன்னாட்டுச் சட்டங்களுக்கு எதிராக நடத்தப்பட்டது இப்போராகும். பள்ளி இறுதித் தேர்வு எழுதக்கூடிய நிலையில் உள்ள 18 வயதான இளைஞர்கள் இப்போரில் ஈடுபடுத்தப்பட்டார்கள். ஹாலிபர்ட்டன், பிளாக் வாட்டர் செக்யூரிட்டி (Halliburtonand Black Water Security) என்ற இரண்டு தனியார் ஒப்பந்தக்காரர்கள் அதிகளவில் போர்ச் செலவை உயர்த்தி இப்போரின் பயன்களைப் பெற்றுள்ளார்கள். நாற்பதாயிரம் அடி உயரத்தில் இருந்து மக்கள் மீது விமானங்கள் வழியாக எறிகுண்டுகள் வீசப்பட்டன. உலகளவில் இராணுவச் செலவிற்காகச் செய்யப்படுகின்ற செலவில் 47 விழுக்காட்டினை அமெரிக்கா மட்டுமே செய்தது” என்று இந்த அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இப்போரின்போது பிரதமராக இருந்த வாஜ்பாய் அமெரிக்கா சென்றிருந்தபோது அன்றைய அதிபர் புஷ், இந்தியப் படைவீரர்களை அமெரிக்காவிற்கு ஆதரவாகப் போரிடு மாறு வேண்டுகோள் விடுத்தார். ஆனால் வாஜ்பாய் நேருக்கு நேரே இந்தப் போரில் இந்தியா தலையிடாது என்று பதிலடி கொடுத்தார். இப்போரின் போது நேரு கடைப்பிடித்த அணி சேரா நாடுகளின் கொள்கையை ஏற்றுக்கொண்டு வாஜ்பாய் செயல்பட்டார்.

மத்திய தரைக்கடல் நாடுகளில் போர் என்பது புதிதல்ல. ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது சுயநலத்திற்காக, வணிகநோக்கிற்காக இப்பகுதிகளில் தனது இராணு வத்தைக் குவித்து வைத்துள்ளது. இதனைப் பயன்படுத்தித் தான் இஸ்ரேலுடன் இணைந்து மற்ற நாடுகளை இராணு வரீதியாக மிரட்டித் தனக்கு ஆதரவாகச் செயல்பட வைத்தது. இதன் காரணமாகத்தான் தற்போது ஈரான் மத்திய தரைக்கடல் நாடுகளின் கடல் எல்லைகளில் மீதுள்ள அமெரிக்காவின் இராணுவத் தளங்கள் மீதும், எண்ணெய் கிடங்குகள் மீதும் தனது வான்வழித் தாக்குதலை நடத்துகிறது.

கடந்த ஆண்டுகளில் இஸ்ரேல் காசா போரில் 75 ஆயிரம் பொதுமக்கள் இறந்துவிட்டனர். அதில் பெரும்பான்மையினர் பெண்களும், குழந்தைகளும், நோயுற்றவர்களும் ஆவர். இப்போரினால் ஏற்பட்ட விளைவுகள் பற்றி ஐக்கியநாடுகள் மன்றத்தின் கண்ணிவெடி நடவடிக்கை ஆய்வுக்குழு (The UN Mine Ac tion Service (UNMAS)), மத்திய கிழக்கு ஆசியாவில் சுற்றுச்சூழல் பாதிப்பால் பெரும் சீரழிவுகள் ஏற்பட்டு வருகின்றன என்பதைக் குறிப்பிட்டு, 2024ஆம் ஆண்டு தொடக்கத்தில் 25000 டன்களுக்கு அதிகமான வெடி பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது இரு அணு க்குண்டு வெடிப்புகளுக்குச் சமம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போரின்போது அமெரிக்கா, ஜப்பான் நாட்டு ஹிரோஷிமா, நாகசாகி நகர்களில் 15000 டன் அளவில் வீசப்பட்ட அணுக்குண்டுகளைவிட இந்த வெடிப்புகளின் அளவு மிக அதிகம் என்று மானுட உரிமைப் பாதுகாப்பு மையம் (EuroMed Human Rights Monitor) குறிப்பிட்டுள்ளது.

போர் என்பது ஆண்களையும், பெண்களையும் கொன்று குவிப்பதாகும். அவர்களை முடமாக்கிச் செயலிழக்கச் செய்யும் கொடுஞ்செயலாகும். இதற்கான செலவுகள் துப்பாக்கியின் கடைசிக் குண்டு வெடித்த பிறகும் தொடர்ந்துகொண்டே இருக்கும். (War is about men and women brutally killing and maiming other men and wom en. The costs live on long after the last shot has been fired Three Trillion Dollors War: The True Cost of the Iraq Conflict, Joseph Stiglitz and Linda Bilmes, 2008, Penguin Publica tions, P. 206) என்று இந்த ஆய்வாளர்கள் குறிப்பிட்ட கருத்தை இன்று ஈரான், அமெரிக்காவும், இஸ்ரேலும் இணைந்து நடத்தி வரும் போர் உண்மை யாக்கிவிட்டதல்லவா?


கடந்த காலத்தில் காசா போரின்போது அமெரிக்காவும், இஸ்ரேலும் இணைந்து செய்த தாக்குதல்களால், வன்கொடுமைகளால் ஏற்பட்ட மரண ஓலங்களும், காயங்களும் இன்னும் ஆறாத சூழ்நிலையில் மீண்டும் ஒரு போரை நடத்தும் அமெரிக்காவின் அதிபர் டிரம்ப் ஒரு இரக்கமற்ற அரக்கனா? என்று உலக மக்கள் எண்ணுகின்றனர். வட அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் உட்பட பலநாடுகளில் மக்கள் போருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களைச் செய்து வருகின்றனர்.

இச்சூழலில், நேரு காலத்தில் பின்பற்றப்பட்ட வெளியுறவுக் கொள்கைகள் பற்றி இன்றைய பிரதமரும் அவருக்குத் துணை நிற்கும் அதிகார எடுபிடிகளும் உணர்ந்துள்ளார்களா என்ற கேள்வி எழுகிறது.

1947இல் விடுதலை பெற்ற இந்தியா பல்வேறு உள்நாட்டுப் பிரச்சினைகளைச் சந்தித்த போதிலும், வெளிநாட்டுக் கொள்கைகளில் ஏகாதிபத்திய நாடுகளுக்கு அடிபணியாத போக்கினையே பின்பற்றியது. இதற்கு முதன்மையான காரணமாகத் திகழ்ந்தவர் இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு.

வியட்நாம் விடுதலை இயக்கத்திற்கும், கியூபா விடுதலை இயக்கத்திற்கும், பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் நேரு தனது ஆதரவினை அளித்தார். ஆதிக்க நாடுகளின் அச்சுறுத்தலுக்கு அடிபணியவில்லை. சான்றாக, 1956இல் எகிப்து நாடு சூயஸ் கால்வாயை நாட்டுடைமையாக்கி தனது முழு அரசுரிமைக் கட்டுப்பாட்டிற்குள் அதிபர் நாசர்

**பேராசிரியர் மு.நாகநாதன்,**
எம்.ஏ.,எம்.எல்.,
பிஎச்.டி.,டி.லிட்.



கொண்டு வந்தார். இதை இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா போன்ற வல்லரசுகள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துப் போருக்குக்கூட ஆயத்தமாயின. அக்காலக் கட்டத்தில் எகிப்து நாட்டிற்கு சூயஸ் கால்வாய் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்குப் போதிய தொழில்நுட்பம் இல்லை. வல்லாதிக்க நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை இருந்தாலும் எகிப்து அதிபர் நாசர், தனது நாட்டினுடைய சுதந்திரத்தையும், அரசுரிமை யையும் மற்ற நாடுகளுக்கு விட்டுக்கொடுக்க தயாராக இல்லை. அந்தச் சூழலில்தான் நேரு அவர்கள் நாசர் அவர்களின் நிலைப்பாட்டினை வெளிப்படையாக ஆதரித் தார். அன்றைய அமெரிக்க அதிபர் தலைவர் ஐசு நோவர் அவர்களிடம் பேசி ஒரு அமைதி உடன்படிக்கையை ஏற்படுத்தி சூயஸ் கால்வாய் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வினைக் கண்டார். சூயஸ் கால்வாயைப் பாதுகாப்ப தற்காக எந்த நாட்டினருடனும் எவ்விதப் பாதுகாப்பு ஒப்பந்தத்தையும் போடவேண்டாம் என்று நேரு வலியுறுத்தி வெற்றியும் பெற்றார்.

2016ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழக ஆய்வாளர் ஸ்வப்னாகோனா நாயுடு ஒரு கட்டுரையில், “எவ்வித ஒப்பந்தத்தையும் தவிர்த்து ஒரு சார்பற்ற நிலையை ஏற்கவேண்டும் என்று நேரு பரிந்துரைத்தார். இத்தகைய ஒத்துழைப்பு முறை மிகவும் வெற்றிகரமாகச் செயல்பட்டதால், யுகோஸ்லோவிய நாட்டின் அதிபர் டிடோவும், நாசரின் எகிப்தும், நேருவின் இந்தியாவும் இணைந்து எடுத்து முடிவு ஐரோப்பிய, ஆப்பிரிக்க, ஆசிய நாடுகள் முழுவதும் சுயசார்புக் கொள்கையின் ஒற்றுமை யின் அடையாளமாக மாறியது” என்று குறிப்பிட்டுள்ளார். இந்த நடவடிக்கைதான் பிற்காலங்களில் அணிசேரா நாடு களின் அமைப்பு வலிமை பெறுவதற்கும் வழிவகுத்தது.

தற்போது இந்தியா பின்பற்றி வரும் வெளியுறவுக் கொள்கை உள்நாட்டில் விலைவாசி உயர்வை, பொருளாதாரத் தேக்கநிலையை உருவாக்கி வருகிறது. ஏன் பிரதமர் நரேந்திரர் ஈரான் போர் தொடங்குவதற்குச் சில நாட்களுக்கு முன்பு இஸ்ரேல் சென்றார். இந்தப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இந்தியா பின்பற்றிய அணிசேரா நாடுகள் கொள்கையை ஏன் காற்றில் பறக்கவிட்டார்? அமெரிக்காவின் டிரம்ப்பைக் கண்டு ஏன் அஞ்சுகிறார்? இந்தியாவின் அரசுரிமையை அமெரிக்கா விடம் ஏன் அடகுவைத்துவிட்டார்? என்று கேள்விகள் மக்கள் மன்றத்தில் எழுப்பப்படுகின்றன.

**யாருடைய கோப்புகளைப் பார்த்து இப்படி அஞ்சுகிறார்? தேர்தல் பரப்புரையிலாவது பிரதமர் பதிலளிப்பாரா என்று நாட்டு மக்களும் உலகமும் எதிர்பார்க்கின்றனர்.**

## ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. – கே.ஏழுமலை, எம்.சி., மு.மணிவண்ணன், கோமதி மணிவண்ணன், வி.டி.செல்வம் பங்கேற்பு!

# தியாகராயர் நகர் 131வது வட்ட ஆலோசனைக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் மு.ம.செந்தில்குமார் வேண்டுகோள்!

*சென்னை, மார்ச் 19-*

*தியாகராயர் நகர், 131வது வட்டக் கழகச் செயலாளர் மு.மு.செந் தில்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகரா யர் நகர் கிழக்கு பகுதி 131வது வட்ட தி.மு.க ஆலோ சனை கூட்டம் இன்று 19.03.2026 வியாழக்கிழ மை மாலை 06.00 மணிக்கு வட்ட அவை தலைவர் வி.டி.செல்வம் தலைமையில் வட்ட கழக அலுவலகம் கலைஞர் பொதுநல மன்றத்தில் நடைபெறுகிறது.*

*கூட்டத்தில் தியாகராய ர்நகர் சட்டமன்ற உறுப்பி னர், கிழக்கு பகுதி கழக செயலாளர் ஜெ.கருணா நிதி எம்.எல்.ஏ., , மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை.MC., அவர் கள், பகுதி அவைதலைவர் மு.மணிவண்ணன் அவர் கள்., 131வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதிமணிவண்ணன். MC., ஆகியோர்கள் கலந் துக்கொண்டு ஆலோச னைகளை வழங்குகிறார் கள்.*

*ஆகையால் மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், பாகப் பொறுப்பாளர்கள், மக ளிர் அணி, மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனை வரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.*